''1990–ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 64 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன..

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1990–ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 30/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திர மாநிலத்திற்கு உதவியளித்தல்

*__திரு. உ.ரா. வரதராசன் :__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழ் நாட்டைத் தாக்க வந்த புயல், மலைபோல வந்த அபாயம் பனி போல நீங்கியதைப்போல நீங்கியிருக்கிறது, மழையாலே சில சேதங்கள் ஏற்பட்டாலும்கூட, ஆனால், நம்முடைய எல்லையைக் கடந்த அந்த புயல் அண்டை மாநிலமான ஆந்திராவிலே கரை கடந்து மிகப் பெரிய சேதங்களையும், உயிரிழப்புகளையும் உண்டாக்கி இருக்கிறது என்பதைப் படிக்க நாமெல்லாம் மிகுந்த வேதனைப் படுகிறோம். அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலே அப்படித் துயருறுகிற மக்களுக்குத் தமிழ் நாட்டினுடைய சகோதர வாஞ்சையையும், நல்லெண்ணத்தையும் தெரிவிக்கக்

கூடிய முறையிலே தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அவர்களுடைய துயர்துடைப்புக்கு, நிவாரணத் திற்கு நிதி வழங்குகின்ற நல்ல அறிவிப்பைச் செய்து உதவ வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எப் பொழுதும் வேறு மாநிலங்களில் மாத்திரமல்ல வேறு நாடுகளில் ஏற்படுகின்ற இதுபோன்ற மனித சமுதாயத்திற்குப் பாதகமான நிகழ்ச்சிகளிலே கூட இந்த அரசும் அல்லது இந்த அரசை நடத்துகின்ற ஆளுங்கட்சியும் எந்த அளவிற்கு துணை நின்று இருக்கின்றன என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே ஆந்திரத்திலே ஏற்பட்டுள்ள இந்த வேதனையான சூழ்நிலையை மனதிற்கொண்டு, நம்மால், நாம் அனுப்புகின்ற நிதி போதுமானது என்று சொல்ல முடியா விட்டாலும் கூட, நம்முடைய உணர்வைக் காட்டுகின்ற வகையில் ஆந்திர அரசுக்கு முதல்வர் நிதியிலேயிருந்து இருபத்தைந்து இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(உ) பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990—ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.31/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் கொள்கை அளவில் ஆதரிக்கிறேன். பொது வாக, இன்றைக்கு விவசாயிகள் பரவலாக இன்னல்கள் தீர்ந்து

* 9-5-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.